முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1535

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.12.2023, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அறமாக வாழுகின்ற தேசிகா
மாறுதலை உலகினில் புரிவேன் என
மகா சக்தியாக தர்மபலம் கூட்டுகின்ற
2. கூட்டுகின்ற அரங்கனே குருராஜனே
குறைவின்றி சுப்ரமணியர் யானும் உமக்கு
ஆற்றல்பட தட்டாது ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 26 ம் நாள், 12.12.2023, செவ்வாய்கிழமை)
தக்கபடி தரணியில் தொடர்ந்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் மகாசக்தி
உலகமெங்கும் தர்மமாக பரவிவர
குறையின்றி அரங்கன் தர்மத்தை
கிளைகளாக அகத்தியர் சன்மார்க்க சங்கமெல்லாம்
4. சங்கமெல்லாம் பேருலகமெங்கும்
சற்குரு அரங்கன் நாமஜெபம் சொல்லி இனிதே
இனிதே தர்மத்தை வளர்த்து வர
இந்ததர்மபலம் பெருகப்பெருக இந்த பேருலகமே மாற்றங்காணும்
5. காணுமப்பா அரங்கன் கருணையாலே
கலியுகத்தில் தர்மவான் படைகள் பெருகி
ஞானவான்கள் ஆகின்ற சக்தியாக
ஞானிகளாவே அவர்கள் உருமாறுகின்ற
6. மாறுகின்ற அற்புதம் கலியிலே
மகத்துவம்பட ஆறுமுகன் என்னால் நடக்கும்
ஆறுதலாய் அரங்கன் தர்மத்தை ஏற்று
உலகோர் ஆற்றல்பட வந்தால் போதும்

7. அற்புதத்தை ஆறுமுகன் நடத்துவேன்
ஆக்கமுடன் இந்த பேருலகம்
சக்திமிகு ஞானயுகமாக
சகலருக்கும் பாதுகாப்பு தருகின்ற

8. தருகின்ற ஞான சித்தர் காலமாக
தக்கபடி ஞானிகளின் ஆட்சியுமாக
ஆக்கமுடன் ஆற்றல்தனை பெறும்
அரங்கன் ஞானத்தால் இந்த அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–